සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
**Department of Education - Western Province**

දෙවන වාර ඇගයීම - 2018
இரண்டாந் தவணை மதிப்பீடு - 2018
**Second Term Evaluation - 2018**

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade: 06 | විෂයය / பாடம் / Subject: தமிழ்மொழியும் இலக்கியமும் | පත්‍රය / வினாத்தாள் / Paper: I,II | පැය / மணித்தியாலம் / Hours: 02 |

නම
பெயர்
Name

## பகுதி - I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **மிகப்பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

1. 'வெயிற் கொடுமையம்மா ! மேனி வேர்க்குதம்மா' எனும் தொடரில் மேனி என்பதன் ஒத்தகருத்துச்சொல்
   1. வானம் 2. உடல் 3. எலி 4. ஆவி
2. 'வாத்தியங்களின் ஓசை போல் சப்தம் கேட்கின்றது' இங்கு சப்தம் என்பதன் ஒத்தகருத்துச்சொல்
   1. ஒலி 2. ஒளி 3. வெளிச்சம் 4. ஆசை
3. பாரதியார் அச்சந் தவிர் என்றார். இத்தொடரில் வரும் அச்சம் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
   1. உண்மை 2. நேர்மை 3. துணிவு 4. பயம்
4. இன்று விடியற்காலையில் சில தீக்கனவுகள் கண்டேன். இத்தொடரில் வரும் கனவு என்பதன் எதிர்ச்சொல்.
   1. நனவு 2. எண்ணம் 3. இரகசியம் 4. தெளிவு
5. சிங்கம், வண்டு, விஸ்ணு, அரித்தல் என்ற பல பொருள் குறிக்கும் ஒரு சொல்
   1. அரம் 2. அரி 3. அறி 4. இறை
6. உயிர் எழுத்துக்களில் நெட்டெழுத்துக்களின் எண்ணிக்கை
   1. 5 2. 6 3. 7 4. 12
7. வல்லின மெய் எழுத்துக்களில் ஒன்று
   1. ங் 2. ல் 3. க் 4. ம்
8. ஒரு வாக்கியத்தின் கருத்து முற்றுப்பெறும் இடமாக அமைவது.
   1. பயனிலை 2. செயப்படுபொருள் 3. எழுவாய் 4. பெயர்த்தொடர்
9. நிறுத்தற் குறியீடுகளில் உணர்ச்சிக்குறி என அழைக்கப்படுவது.
   1. காற்புள்ளி 2. முற்றுப்புள்ளி 3. வியப்புக்குறி 4. வினாக்குறி
10. ஐம்பதாவது ஆண்டின் நிறைவில் கொண்டாடப்படும் விழா
    1. அமுதவிழா 2. பொன்விழா 3. வெள்ளிவிழா 4. வைரவிழா

11. ‘புதிய ஆத்தி சூடி’ யைத் தமிழ்மொழிக்கு உருவாக்கித் தந்தவர்

1. ஔவையார் 2. அழ. வள்ளியப்பா

3. பாரதியார் 4. நவாலியூர் சோமசுந்தரப்புலவர்

12. மாணவர்கள் மைதானத்தைச் சுத்தம் செய்தனர் இவ்வாக்கியத்தின் செயப்படுபொருளாக அமைவது.

1. மைதானம் 2. சுத்தம் 3. மாணவர்கள் 4. செய்தனர்

13. கடவுள் இல்லை என்று வாதிடும் கொள்கை உடையவன்.

1. பிரமச்சாரி 2. ஞானி 3. நாத்திகன் 4. ஆத்திகன்

14. “பனைக்கு ஓலை என்பது போல நெல்லிற்கு…..

1. இலை 2. தாழை 3. தாள் 4. ஓலை

15. மாணவனுக்கு மாணவி என்பது போல பாங்கனுக்கு

1. பாடினி 2. பாங்கி 3. பாடகி 4. பாங்குவிச்சி

16. ஒரு வாக்கியத்தில் ஒரு எழுவாயும் ஒரு பயனிலையும் காணப்படும் ஆயின் அது ……………… எனப்படும்.

1. கலப்பு வாக்கியம் 2. தனிவாக்கியம்

3. தொடர் வாக்கியம் 4. கூட்டுவாக்கியம்

17. பந்தியொன்றை அமைக்கும் போது …………………….. தவிர்க்கப்பட வேண்டும்.

1. வாக்கியங்கள் ஒழுங்கமைத்தல் 2. கூறியது கூறல்

3. கருத்துத் தொடர்பு 4. கருப்பொருள்

18. ஆறாந்தர வகுப்பறைக்குள் அதிபர் வந்தார். இவ்வாக்கியத்தின் எழுவாய்

1. வகுப்பறை 2. ஆறாந்தரம் 3. அதிபர் 4. வந்தார்

19. காலத்தினால் செய்த நன்றி சிறிது எனினும் …………….. மாணப் பெரிது என்றார் வள்ளுவர்.

1. சால்பின் 2. ஞாலத்தின் 3. வானகம் 4. துன்பத்தின்

20. ‘Television’ என்ற ஆங்கிலச் சொல்லுக்கான தமிழ் வடிவம்

1. வானொலி 2. தொலைக்காட்டி 3. தொலைக்காட்சி 4. நுணுக்குக்காட்டி

## பகுதி – II

**முதலாம், இரண்டாம் வினாக்களுக்கும் ஏனைய மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

**1.** இரண்டாம் தவணையில் தமிழ் பாடத்திற்காக உம்மால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

I. உம்மால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடு யாது?

II. கணிப்பீட்டிற்காகத் தகவல்களை எவ்வாறு பெற்றுக் கொண்டீர்?

III. கணிப்பீட்டினைச் செய்யும் போது நீர் அடைந்த இடர்பாடுகள் மூன்றினைக் குறிப்பிடுக.

IV. ஆசிரியரால் உமக்கு வழங்கப்பட்ட அறிவுரைகள் எவை?

V. இக் கணிப்பீட்டினைப் பூரணப்படுத்தியதன் பின் நீர் பெற்றுக் கொண்ட நன்மைகள் எவை?

(2 + 3 + 3 + 3 + 3 = 14 புள்ளிகள்)

**2.** பின்வரும் தலைப்புக்களில் ஒன்றினைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

I. வாசிப்பு மனிதனைப் பூரணமாக்கும்

II. உடைந்த குடையின் சுயசரிதை

III. நான் விரும்பும் பெரியார்

IV. உண்மையைப் பேசி உயர்வடைவோம்

(16 புள்ளிகள்)

**3.** மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட உமது நண்பன் அல்லது நண்பியின் நலன் விசாரித்து, ஆறுதல் கூறிக் கடிதம் எழுதுக.

(10 புள்ளிகள்)

**4.** பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

I. மோவாஸ் பறவையின் முட்டை ஓடு எதற்குப் பயன்படுகிறது

II. செய்தித் தாள்களின் பயன்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

III. பாண்டிமாதேவி கண்ட தீக்கனவுகள் இரண்டினைக் குறிப்பிடுக.

IV. ஆண் குரங்கும், பெண் குரங்கும் எவ்வாறு அழைக்கப்படும்?

V. ஆத்திசூடி எனப் பெயர் வரக் காரணம் யாது?

( 5 X 2 = 10 புள்ளிகள்)

**5.** பின்வரும் சொற்களைக் கொண்டு கருத்துப் புலப்படும் வகையில் வாக்கியம் எழுதுக.

I. பொற்கொல்லன்

II. ஒப்பனை

III. மூத்தோர்

IV. கனல்

V. தேர்வு

**6.** பின்வரும் வாக்கியங்களின் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் போன்றவற்றை இனங்கண்டு எழுதுக

I. தம்பி படத்தை வரைந்தான்

II. ஆசிரியர் வகுப்பறைக்கு விரைவாக வருகின்றார்

III. வானில் நிலவு பிரகாசமாய்த் தெரிகின்றது.

IV. ஔவையாரால் ஆத்திசூடி பாடப்பட்டது.

V. உலகின் ஒரு மூலையில் நடக்கும் நிகழ்வுகளை செய்தித்தாள்கள் அறியச் செய்கின்றன.

**7.** ஒழுங்கற்றுக் காணப்படும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி பந்தியாக எழுதுக.

I. எமது பெற்றோர்களை இயலாமை, முதுமை அணுகும் போது முதியோர்கள் ஆகின்றனர்.

II. எனவே பெற்றோரைப் பேணி வாழ்வதை நாம் ஒரு போதும் தவறவிடக் கூடாது.

III. பெற்றோர்கள் எமது கண்கண்ட தெய்வங்கள் ஆவர்.

IV. இதனால் முதியோர்கள் உளப் பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.

V. இவ்வாறு முதியவர்கள் ஆகும் போது இவர்களைப் பிள்ளைகள் சுமை எனக்கருதி முதியோர்கள் இல்லங்களில் சேர்க்கின்றனர்.